# ஸ்ரீ. எஸ். பாதல் சந்த் சுகன்கவூர் சோர்டியா விவேகானந்த வித்யாலயா - முடிச்சூர்

**ஸ்ரீ. எஸ். பாதல் சந்த் சுகன்கவூர் சோர்டியா விவேகானந்த வித்யாலயா, முடிச்சூர் பள்ளியில் 26.10.2018 வெள்ளிகிழமை** அன்று **2.30** மணியளவில் கற்றல் கற்பித்தலோடு கலந்த இயங்கலை தேர்வு திட்ட அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை திருமதி.கல்பனா ஆனந்த் அவர்கள் திருவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

அதன் பின்னர் சென்னை ஆன்டாட்(Ondot) முறைமையின் தலைமை நடுவர் திரு.ஆனந்த் சுப்பிரமணியன் இயங்கலை தேர்வினை பற்றி நன்கு விளக்கினார். அவர் மாணவர்களுக்கு பின்வரும் கருத்தினை கூறினார் அவை 'தோல்வியைக் கண்டு பயப்படாதே' தோற்று போனாலும் அதில் இருந்து நிறைய கற்றுக் கொள்ளலாம் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக, விவேகானந்த பள்ளியின் செயலாளர். திரு.மீனாட்சி சுந்தரம் ஜீ பள்ளியின் தாளாளர் Dr.கோலப்பபிள்ளை ஜீ, மற்றும் பள்ளியின் முதல்வர் Dr.அமுதவள்ளி ஜீ முதலானோர் கலந்து கொண்டனர். அவர்கள் மட்டுமின்றி அதிக அளவில் மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இயங்கலை கணினி வழித் தேர்வின் மூலம் மாணவர்களின் கவனித்தல் திறன், அறிவுத்திறன் மற்றும் வினாக்களை உடனுக்குடன் புரிந்து கொண்டு விடையளிக்கும் திறன், நேரம் ஆளுமைத்திறன் ஆகியவை இதன் மூலம் கிடைக்கும். இதனால், மாணவர்களின் நலன்கருதி இந்த இயங்கலை கணினி வழித் தேர்வினை இப்பள்ளியில் அறிமுகப்படுத்தியுள்ளனர்.